
Arimā Nōkku

2:2 சூலை 2008

# அரிமா நோக்கு

ரூ.20



ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா
# நோக்கு
22 தலை 2008

ஐந்தாம்படை
-வ. ஜெயதேவன் 03
*Importance of Mother Tongue*
*–Dr. Reshmi d. Ramdhony* 06
வள்ளுவரும் வடநூலாரும்
*- ப. மருதநாயகம்* 11
குப்புசாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிறுவனம்
*- பா. மதுகேசுவரன்* 15
*HYPOTHESIS OF PROTO-DRAVIDIAN PROVENANCE OF INDUS CIVILISATION:*
*– P. Ramanathan* 16
சாரா மார்கரேட் ஃபுல்லர்
*- இரா. பிரேமா* 29
திருவள்ளுவரின் மொழி ஆளுமையில் புதுமை
*- இரா. சீனிவாசன்* 40
தமிழ்ச்செம்மொழி இலக்கண இலக்கியங்களின் முதற்பதிப்புகள்
*- பா. ஜெய்கணேஷ்* 45
திருக்குறளில் காமன்
*- வே. ச. திருமாவளவன்* 47
முரண் தொடை: புதிய பார்வை
*- ச. அகத்தியலிங்கம்* 50
செவ்விலக்கியக் கோட்பாடும் திருமுருகாற்றுப்படையும்
*- துரை. சீனிச்சாமி* 56
தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
*- கோ. வெற்றிச்செல்வி* 61
ஸ்ரீ ஒரு வெட்டுமுகம்
*- ஞா. பாலசந்திரன்* 63

*நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள் படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும், மாற்றவும் பதிப்பாளருக்கு உரிமை உண்டு. முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து எதனையும் எடுத்தாளலாகாது.*

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## உலக மொழிகளில் தமிழ்ச் சொற்கள்: பேரகராதி

நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் இலக்கண நூல்களுள் தொன்மையதாகிய தொல்காப்பியம், தமிழரின் மொழி, இலக்கியம், வாழ்க்கை ஆகியவற்றுக் கெல்லாம் இலக்கணம் செய்திருக்கிறது. பல்வேறு பரிமாணங்களில் இயங்கும் தொல்காப்பியம் தமிழின் முதல் அகராதியாகவும் இயங்கி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. தொல்காப்பியத்தின் உரியியல், மரபியல்களில் செயல்படும் அகராதியியல் கூறுகள் தமிழ் அகராதி முயற்சிகளின் அகர நிலையாகக் கருதத்தக்கவை. உரியியல், மரபியல் இரண்டனுக்கும் நோக்கம் அகராதி வகுப்பதும் தொகுப்பதுமாக இல்லை எனினும் *சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லினாகும்* என்னும் தொல்காப்பியக் கோட்பாட்டின் ஊடாக அகராதியியல் அவற்றுள் அழகுற அரும்புவதைக் காணமுடிகிறது.

திவாகரம் (கி.பி. 8ஆம் நூ.)முதல் சூடாமணி (16 ஆம் நூ.) வரை, தமிழில் நிகண்டுகள் பல உருவாக்கப்பட்டு அகராதியியலைத் தமிழில் வளர்த்தெடுத் துள்ளன. செய்யுள் வடிவினவாகிய இந்நிகண்டுகளுக்குச் சான்றோர்கள் உரை வகுத்துப் படிப்பவர்க்கு உதவியாகப் படிகள் அமைத்துக் கொடுத் துள்ளனர். இந்திய மொழிகளிலேயே முதலில் பேரகராதி தொகுத்து வெளியிடப்பட்ட பெருமையைத் தமிழ்மொழி பெற்றுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் சீரிய முயற்சியின் விளைவு அது. இப்போதும் அப் பல்கலைக்கழகம் அப்பேரகராதியைப் புதுக்கி, பெருக்கித் திருந்திய பதிப்பைக் கொணர்வதில் ஈடுபட்டுவருகிறது.

தமிழில் பிறமொழிக் கலப்பு என்கிற வகையில் மூத்ததாக அமைந்துவிட்ட வடசொற் கலப்புப் பற்றித் தொல்காப்பியரே சிந்தித்து, தமிழின் தனித் தன்மையைக் காப்பதற்குரிய கண்ணோட்டத்தோடு சில வரன்முறைகளை ஏற்படுத்தியிருக்கிறார். மொழித் தூய்மையம் குறித்த முதற்குறிப்புகளாகக் கொள்ளத் தக்கவை அவை.

வடசொற்களைத் தவிர்த்துத் தனித்தமிழ்ச்சொற்களையே கையாளவேண்டும் என்கிற தமிழுணர்வின் அடிப்படையில் தி. நீலாம்பிகை அம்மையார் *வடசொற்றமிழ் அகர வரிசை* என்னும் நூலை 1937-இல் வெளியிட்டார். தமிழ் வழக்கில் இடம்பெற்றுவிட்ட அரபு, உருது, இந்தி முதலிய பிறமொழிச் சொற் களை அடையாளப்படுத்தியிருக்கும் முயற்சியைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரகராதியிலும் மதுரைத்தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதியிலும் காண முடிகிறது.

சமற்கிருதம் தவிரவும் தெலுங்கு, உருது, இந்துஸ்தானி, பாரசீகம் அரபு, ஆங்கிலம், போர்ச்சுகீசியம், பிரெஞ்சு, துருக்கி ஆகிய பல்வேறு மொழிச் சொற்கள் தமிழ்வழக்கில் இடம்பெற்றுவிட்டதைக் கண்டு—அவற்றை யெல்லாம் தனித்தனியாகத் தொகுத்து உருவாக்கப்பட்ட சிறிய அளவிலான அகராதி ஒன்றைத் *தமிழறிஞர் அகராதி* என்ற பெயரில் புரசைப்பாக்கம் தமிழ்ப்பண்டிதர் சீ. கிருஷ்ணசாமிப் பிள்ளை. 1939-இல் வெளியிட்டுள்ளார். பிற சில கூறுகளையும் உள்ளடக்கிய இவ்வகராதிக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் தெ.பொ.மீ., '*தனித்தமிழ்ச் சுவை விரும்புவார் பிற சுவை இவை என எளிதில் அறிய வழிகாட்டுகிறது இந்நூல்; பிறமொழிகள் வந்து புகுந்த முறையை அறிவதற்கு இந்நூல் சிறந்த துணையாம் என்றும் மொழி நூலாராய்ச்சியாளர் இவர் கண்ட கால்கோளை அடிப்படையாகக்கொண்டு பலபல கோட்டைகளைக் கட்டுதற்கு இடம் உண்டு*' என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் முன்னோடியான இந்த முயற்சியினைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க

செயற்பாடுகள் தமிழ் உலகில் தோன்றவில்லை.

தமிழ்மொழி, தமிழ்மக்கள், தமிழ்நிலம் ஆகிய முப்பரிமாண அடிப்படைகளோடு உலகின் பல்வேறு நாட்டினரும் உறவு கொண்டிருந்ததன் அடையாளங்களில் ஒன்றாகத் தமிழ்ச் சொற்கள் உலகமொழிகள் பலவற்றுள்ளும் பரவியுள்ளதை இராபர்ட் கால்டுவெல் முதல் கமில்சுவலபெல் வரை பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பல்வேறுநாட்டினரும், தமிழ்ச்சொற்களைத் தத்தம் மொழிகளில் உள்வாங்கிப் பேச்சு, எழுத்து மொழிகளில் இடம்பெறச்செய்திருப்பதோடு தமிழ்மொழியைத் தத்தம் தாய்மொழியில் பயில்வோர்க்கு உதவியாக அகராதிகள் தொகுக்கவும் முற்பட்டிருப்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. புரோயென்சா (Proenca, Anto De) என்பவரால் *தமிழ் -போர்ச்சுகீசிய அகராதி* ஒன்று 1679-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. கி.பி. 2005-இல் ஹோர்ஸ் சீயா, இராசாராம் ஆகிய இருவருமாக இணைந்து *செருமன் தமிழகராதி*யை வெளியிட்டிருப்பதையும் இவ்வகையில் கவனத்திற்கொள்ளலாம்.

உலகெங்கும் உள்ள பல்வேறு மொழிகளில் தமிழ்ச்சொற்கள் பரவலாக இடம் பெற்றிருப்பதற்கான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு - அவற்றையெல்லாம் தொகுக்கிற முயற்சிகளைத் தாய்த் தமிழகம், குறிப்பாகச் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனம் - மேற்கொள்ள வேண்டும். உலகம் முழுமையும் தமிழர்களும் தமிழும் கொண்டிருந்த உறவுகளை - மொழி, பண்பாட்டு, வாழ்வியல் மரபுகளின் கொள்வினை, கொடுப்பினைகளை அறிய, ஆராயத் தரவுகள் திரட்ட அவை உதவக்கூடும். அன்றியும் உலகெங்கும் பரவித் தனது செல்வாக்கைப் பல்வேறு மக்களின் தாய் மொழிகளில் பதித்துள்ள தமிழ் மொழியின் வல்லமை மட்டுமல்லாமல், வளத்திலும் தகுதியிலும் மேலோங்கியிருந்த அதன் ஒப்பறு திறப்பாட்டையும் உலகமும் நாமும் உணர அம்முயற்சிகள் தேவைப்படுகின்றன.

அறிவார்ந்த நெறியிலான முயற்சிகளை - வளர்ந்து வருகிற இன்றைய ஆய்வுப்போக்குகளை நுணுகித் தேர்ந்த செயல்பாடுகளை உளங்கொண்டு, அயல்மொழிகளில் கலந்து இடம்பெற்றுள்ள தமிழ்ச் சொற்களை ஒரு பேரகராதியாகத் தொகுத்து, அவ்வம்மொழிகளின் வடிவம், ஒலிப்புக்குறிப்பு, இலக்கண நிலை முதலிய பல குறிப்புகளோடும் வெளியிடவேண்டும்.

❖


*ஆசிரியர்*

**ஈரோடு தமிழன்பன்**

*இணையாசிரியர் (மதிப்புறு நிலை)*

**வ. ஜெயதேவன்**

*ஆசிரியர் குழு*

**சிலம்பொலி சு. செல்லப்பன்**

**கா. செல்லப்பன்**

**இரா. இளவரசு**

**நா. சுப்பிரமணியன் (கனடா)**

**பொன். செல்வகணபதி**

**நா. முத்துக்குமார்**

**மு. பரமசிவம் (மலேசியா)**

**பத்மாவதி விவேகானந்தன்**

**இரா. பிரேமா**

**பா. இரவிக்குமார்**

*அறிவுரைக் குழு*

**இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்**

*பதிப்பாளர்*

**இரா. பன்னிருகைவடிவேலன்**

*துணைப் பதிப்பாளர்*

**'விழிகள்' தி. நடராசன்**


## கட்டண விவரம்

**ஈராண்டுக் கட்டணம் ரூ. 150/- US $ 10**
**வாழ்நாள் கட்டணம் ரூ. 2000/- US $100**
**புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $200**
**நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 10,000/-**

- நிறுவனம் சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்) ரூ. 15, 000
உள்ளட்டை (பல வண்ணங்கள்) ரூ. 10, 000
முழுப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 3, 000
அரைப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 1, 500

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகைமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*


*அரிமா நோக்கு*

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com மின் அஞ்சல்: tamilnokku@rediffmail.com செல்: 9380626448